முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 996

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.06.2022, செவ்வாய்கிழமை

1. ஓங்கார பிரம்மத்தை உணர்ந்து நன்கு
ஓங்கார சூட்சுமத்தின் வழி நடந்து
ஓங்காரக்குடில் படைத்து அருளுகின்ற
ஓங்காரன் என் அவதார ஞான தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 07 நாள், 21.06.2022 செவ்வாய்கிழமை)
ஆசிதந்து உலகோர் உன் கரம்பட
ஆற்றலை கலியுகத்தில் பெற்று சிறக்க
3. சிறக்கவே ஆறுமுகன் யான் உன்னுள்ளே
சித்திகளை தந்து நித்தம் வரமாக
மறுப்பின்றி மக்களை நோக்கி நீ
மாதர்மம் செய்ய வழிவகை செய்து
4. செய்துமே உன்னுள் மகா சூட்சுமமாய்
செப்பிடுவேன் ஆறுமுகன் இருந்து அருளுகின்றேன்
ஐயமற அரங்கன் உன்னை காணும் மக்களுக்கு
ஆறுமுகன் என் அருளும் காட்சியும் உண்டு உண்டு
5. உண்டான உன்வழி தர்மத்தை
உயர்வாக பெற்ற மக்களுக்கு
கொண்டதொரு ஞான வாழ்வு
குறையின்றி சித்திக்க ஆசி உண்டு
6. ஆசிதந்தேன் பிரம்ம சூட்சுமங்களும்
ஆசிதந்தேன் அதீத ரகசியங்களும்
வாசியோக சர்வ யோகங்களும்
வல்லமைபட உன்வழி உலகோர்க்கு
7. உலகோர்க்கு ஆறுமுகன் யான் அருள இருக்க
உண்மைவழி உன்மார்க்கம் என்று கருதி
உலகோர் சடுதி உன்வழி வர
உலகமே ஞான யுகமாற்றம் காணக்கூடும்
8. காணவே அற்புதத்தை ஓங்காரக்குடிலில்
கருணைகொண்டு ஆறுமுகன் யான் சக்தியாக்கி
ஞானமாக தானமாக அன்னதானமாக
நன்மை கூட்டி உலகோர்க்கு அருளுகின்றேன்

9. அருள்வழியே உலகோர் ஏற்றுவர
அமைதிமிக்க ஞான பூமியாக
இந்த பேருலகம் பொருள்வளமும்
இயற்கைபலமும் புண்ணியபலமும் கூடி இனிதே மாற்றங்காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–